சுடித நகல்

333/06.

– 163 –
157

சுருக்கம்

பொதுப்பணித்துறை – மணல் எடுப்பு மற்றும் விற்பனை – மணல் குவாரிகள் செயல்பாட்டினை முறைப்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (சி.பா.2) துறை

அரசாணை (நிலை) எண்.110

நாள் 6.7.2006

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.95 தொழில்துறை நாள் 1.10.03
2. அரசாணை (நிலை) எண்.451 பொதுப்பணித்துறை நாள் 3.10.2003
3. அரசாணை (நிலை) எண்.401 பொதுப்பணித்துறை நாள் 18.6.2004
4. அரசாணை (நிலை) எண்.414 பொதுப்பணித்துறை நாள் 30.6.2004

-oOo-

ஆணை

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதி 1959ற்கு திருத்தம் செய்யப்பட்டு விதி 38ஏ புதிதாக சேர்க்கப்பட்டு ஆணையிடப்பட்டது. அதன்படி அரசு நிலங்களில் மணல் எடுக்க வழங்கப்பட்ட குத்தகை உரிமை 2.10.2003 அன்றுடன் முடிவுற்றதாகவும் பொதுப்பணித்துறை மூலம் அரசே குவாரிகளை நடத்தலாம் என்றும் ஆணையிடப்பட்டது. அதற்கிணங்க மணல் குவாரிகள் பொதுப்பணித்துறை மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

2. கட்டுமான பணிக்கு பொதுமக்களுக்கு தேவைப்படும் மணல் அளவின் வரத்து குறைந்ததாலும், தட்டுப்பாட்டின் காரணமாக மணல் விலை அதிகரித்ததாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தை குறைத்து, அவர்களுக்கு நியாயமான விலையில் தேவைப்படும் அளவிற்கு மணல் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுப்பது குறித்து ஆய்வு செய்து பின்வருமாறு முடிவு செய்து அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

(1) உள்ளூர் மக்களின் நலனை கருத்தில் கொண்டும், நிலத்தடி நீரின் மட்டம் அளவு மற்றும் ஆற்றை சுற்றியுள்ள பகுதிகளில் அதன் சுற்றுச்சூழல்



Scanned with CamScanner

பாதிக்கப்படாமல் இருக்கவும் பொதுப்பணித்துறையே தேர்ந்து மணல் குவாரியை நடத்த வேண்டும்.

(2) பொதுப்பணித்துறையில் விதிமுறைகளின்படி கூடுதல் குவாரிகளை கண்டறிந்து தாமதமின்றி உடன் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(3) புதிதாக மணல் குவாரிகள் துவங்குவதற்கான ஒப்புதல் தற்பொழுது அரசு அளவில் வழங்கப்பட்டு வருகிறது. காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு இனி ஒப்புதல் வழங்குவதற்கு பொதுப்பணித்துறை அலுவலர்கள் இதற்கான செயற்குறிப்புகளை உரிய காலத்தில் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பு ஒப்புதல் பெறவேண்டும்.

(4) மணல் எடுத்துச் செல்லும் நேரம் தற்போது காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை என்பதற்கு பதிலாக காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை மணல் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.

(5) திருட்டுத்தனமாக மணல் எடுப்பதைத் தடுக்க காவல்துறை, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை மற்றும் கனிம வளத்துறை ஆகியவற்றின் அலுவலர்களைக் கொண்ட தனிக் குழு அமைக்கப்பட்டு இரவு நேரங்களில் சோதனை மேற்கொள்ளப்படும்.

(6) மணல் குவாரிகள் சம்பந்தமாக வாடகை ஊர்திகள் உபயோகித்தல், எரிபொருள் செலவு மற்றும் திடீர் சோதனை செய்வது போன்ற அவசர நிமித்தமாக ஏற்படும் செலவினங்களை மேற்கொள்ள ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) வீதம் தேவையான ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தனியாக சில்லரை செலவின நிதி வழங்க ஆணையிடப்படுகிறது.

(7) மணல் குவாரி நடத்தும் இடங்களில் போக்குவரத்தை முறைப்படுத்துவதற்கும் அவ்வப்போது ஏற்படும் பிரச்சனைகளைச் சமாளிப்பதற்கும் பணியாளர்களை மாற்றுப் பணியில் ஈடுபடுத்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(8) மணல் வழங்குவதை முறைப்படுத்தவும் மணல் எடுப்பதற்குரிய கட்டணத்தை (வரைவு கேட்போலை) பெறுவதற்கும் பொதுப்பணித்துறைத் துறையில் கூடுதல் பணியாளர்களை மாற்றுப்பணி மூலம் நியமிக்கவும் அதன் விவரத்தினை அரசுக்கு உடனடியாக தெரிவிக்கவும் தலைமைப் பொறியாளர் பொதுப்பணித்துறை அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(9) அனுமதிக்கப்பட்ட இரண்டு யூனிட் லோடுக்கு மேல் லாரிகளில் அதிக அளவு மணல் கொண்டு செல்லாமல் பொதுப்பணித்துறை அலுவலர்கள் கவனத்துடன் சரிபார்க்க வேண்டும்.

(10) இரண்டாவது (second sales) விற்பனை செய்யுமிடங்களில் மறு விற்பனை வரி செலுத்தப்படுகிறதா என்பதனை வணிகவரித்துறை அலுவலர்கள் சரிபார்க்க வேண்டும்.

3. மேலே பத்தி 2 வரிசை எண் (6)ல் குறிப்பிட்டுள்ள செலவித்தை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.



Scanned with CamScanner

159

"2053 00 மாவட்ட நிர்வாகம் 093 மாவட்ட பணியாளரமைப்பு திட்டத்தில் சேராதது AA மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மாஜிஸ்டிரேட்டுகளும் 05 அலுவலகச் செலவினங்கள் 02 ஏனைய சில்லரைச் செலவுகள்"
(துதொகு 2053 00 093 AA 0526)

4. இந்த அரசாணை நிதித்துறையில் அ.சா.எண்.2445/FS/P/2006 நாள் 5.7.2006இல் தெரிவிக்கப்பட்டுள்ள இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஒம்) ............................
தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

மே.எ.ந.க.எண்.3627/எல்சி/2006

ஆணையர் மற்றும் இயக்குநர்
அலுவலகம்,
புவியியல் மற்றும் சுரங்கத்துறை,
கிண்டி, சென்னை—32.

நகல் அனுப்பப்படுகிறது.

ஆணையர் மற்றும் இயக்குநருக்காக.

14/7/06

பெறுநர்

1. எல்லா மாவட்ட அலுவலர்கள்
2. இணை இயக்குநர் / துணை இயக்குநர் / உதவி இயக்குநர்
3. எம்எம்1, எம்எம்2, எம்எம்3, எம்எம்4, எம்எம்5, எம்எம்6, எம்எம்7.
4. நகல் எல்சி இருப்புக்கோப்பு

Scanned with CamScanner